## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006
## மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு மார்ச் 2018
## தனித் தேர்வர்களுக்கான அறிவுரைகள்

மார்ச் 2018–ல் நடைபெறவுள்ள மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தனித்தேர்வர்கள் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களுக்கு (Govt.Examination service centre) உரிய ஆவணங்களுடன் நேரில் சென்று விண்ணப்பங்கள் ஆன்–லைனில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

| **தனித்தேர்வர் வகை** | **விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர்** | **தேர்வுக் கட்டணம், இதர கட்டணங்கள் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணம்** |
|---|---|---|
| மறுமுறை தேர்வெழுதும் தனித்தேர்வர் (H வகை) | மேல்நிலைத் தேர்வினை ஏற்கனவே எழுதி தேர்ச்சி பெறாத பாடங்களில் நடைமுறையில் உள்ள பாடத்திட்டத்தில் மட்டுமே தேர்வெழுத விண்ணப்பிக்க வேண்டும்.<br>பள்ளி மாணவராக பதிவு செய்யப்பட்டு எழுத்துத் தேர்வு அனைத்திற்கும் வருகை தராதவர்கள், தாம் பயின்ற பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து மேல்நிலைக் கல்வியின்போது போதிய வருகை நாட்கள் பெற்றிருந்தார் என்பதற்கான சான்றிதழைப் பெற்று இணைக்க வேண்டும். | தேர்வுக் கட்டணம் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/– இதரக் கட்டணம் ரூ.35/–<br>(உ–ம்)<br>ஒரு பாடம் ரூ.50+35= 85/–<br><br>இரு பாடங்கள் ரூ.100+35= 135 மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/–<br><br>**அபராதக் கட்டணம் ரூ.1,000/–** |
| நேரடித் தனித்தேர்வர் (HP வகை) | இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் (11ம் வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி) பொதுத் தேர்வில் பல்கலைக் கழகப் படிப்பிற்கு தகுதியானவர்கள் என அறிவிக்கப்பட்டவர்கள்/புதிய 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் 35 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் இக்கல்வித் தகுதிக்கு சமமான இதர பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் (அதற்கான இணைச்சான்றிதழை (Equivalence Certificate) அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பெற்று சமர்பிக்க வேண்டும்) பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நேரடித் தனித்தேர்வராக விண்ணப்பிக்கலாம். | தேர்வுக் கட்டணம் ரூ.150/–<br>இதரக் கட்டணம் ரூ.35/–<br>கேட்டல்/பேசுதல் திறன் தேர்வுக் கட்டணம் ரூ.2/–<br>மொத்தக் கட்டணம் ரூ.187/– மற்றும் ஆன் லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/–<br><br>**அபராதக் கட்டணம் ரூ.1,000/–** |

| | | |
|---|---|---|
| | 1. மனுதாரர் மேல்நிலைத் தேர்வினை இந்த மாநிலத்தில் அல்லது வேறு மாநிலத்தில் ஏற்கனவே எழுதியிருக்கக் கூடாது<br><br>2. 01.03.2018 அன்று $16^{1/2}$ வயது (16 வருடம் 6 மாதங்கள் ) நிறைவு செய்பவராக இருத்தல் வேண்டும்.<br><br>3. இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு அல்லது அதற்குச் சமமான பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆண்டில் இருந்து இரண்டு ஆண்டு கால இடைவெளி இருத்தல் வேண்டும். (அதாவது மார்ச் 2018 தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள் எஸ்.எஸ்.எல்.சி அல்லது அதற்கு இணையான தேர்வினை மார்ச்/ஜூன் 2016 அல்லது அதற்கு முந்தைய பருவங்களில் தேர்ச்சி அடைந்து முடித்திருக்க வேண்டும்.<br><br>4. வெளி மாநிலத்தில் படிப்பை முடித்து இத்தேர்விற்கு விண்ணப்பிப்பவர்கள் அம்மாநில கல்வி வாரியத்தால் வழங்கப்பட்ட இடப்பெயர்வு சான்றிதழின் (Migration Certificate) அசலையும் விண்ணப்பிக்க மனுவுடன் இணைக்க வேண்டும்.<br><br>5. மேல்நிலைத் தேர்வு பொதுக் கல்வி பாடத் தொகுப்பின் கீழ் பகுதி I மற்றும் பகுதி II மொழிப் பாடங்களுடன் பக்கம் 4ல் குறிப்பிட்டுள்ள ஐந்து பாடத் தொகுப்புகளில் (செய்முறை அல்லாத பாடங்கள்) ஏதேனுமொன்றில் நான்கு பாடங்களுக்கு சேர்த்து மொத்தம் ஆறு பாடங்களும் விண்ணப்பிக்க வேண்டும் (பக்கம் 4ல் வரிசை எண் 1–னைக் காண்க) | |

| | | |
|---|---|---|
| | 6. இத்துறையால் HP தேர்வர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ் மட்டுமே வழங்கப்படும். மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) வழங்கப்பட மாட்டாது. இத்துறையால் தனித்தேர்வர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ் பள்ளிகள் மூலம் பயிலும் மாணவர்களுக்கு வழங்கும் மதிப்பெண் சான்றிதழ்களுக்கு சமமாகும்.<br>7. பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று இரண்டு ஆண்டு கால இடைவெளிக்கு பின் நேரடித் தனித்தேர்வராக விண்ணப்பித்து தேர்வெழுதுவதற்கு இப்பருவமே இறுதி வாய்ப்பாகும். இதன் பிறகு பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் மேல்நிலை முதாலம் ஆண்டு பொதுத்தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற பிறகே, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு எழுத இயலும். | |

மொழிப் பாடங்களில் பழைய பாடத்திட்டத்தின்படி (மார்ச் 97–க்கு முன்பாக) தேர்வெழுதி தேர்ச்சி பெறாமல், அப்பாடங்களில் மீண்டும் தற்போது தேர்வெழுத விண்ணப்பிக்கும் (H வகை) தேர்வர்களும் முதன் முறையாக விண்ணப்பிக்கும் தேர்வர்களும் கேட்டல்/பேசுதல் திறன் தேர்வுக்காக ரூ.2/– கூடுதலாக செலுத்த வேண்டும்.

## விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் (Govt Examination service Centres)

ஆண் தனித்தேர்வர்களும், பெண் தனித்தேர்வர்களும் தங்களது விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்திட கல்வி மாவட்ட வாரியாக தனித்தனியே அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் (Govt Examination service Centres) அமைக்கப்பட்டுள்ளன. தனித்தேர்வர்கள் இம்மையங்களுக்கு உரிய ஆவணங்களுடன் நேரில் சென்று தங்களுடைய விண்ணப்பங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களின் விவரங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம். மேலும், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

4...

**விண்ணப்பிக்க வேண்டிய தேதிகள் :**

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களில் (Government Examinations Service Centre) – **11.12.2017** ( திங்கட்கிழமை) காலை **10.00** மணி முதல் **16.12.2017** (சனிக்கிழமை) மாலை **5.45** மணி வரை அபராதக் கட்டணமின்றியும், **18.12.2017** (திங்கட்கிழமை) முதல் **20.12.2017** (புதன்கிழமை) வரை அபராதக் கட்டணத்துடனும் தங்களின் விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ள வேண்டும். **தட்கல் முறையில் விண்ணப்பித்திட மீளவும் தனியே வாய்ப்பளிக்கப்படமாட்டாது.**

**விண்ணப்ப எண்ணின் முக்கியத்துவம் :**

ஆன்–லைனில் விண்ணப்பத்தினைப் பதிவு செய்த பிறகு, தனித்தேர்வர்களுக்கு ஒப்புகைச்சீட்டு (Registration Slip) வழங்கப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application number) பயன்படுத்தியே அரசுத் தேர்வுத் துறை பின்னர் அறிவிக்கும் நாளில் தேர்வுக் கூட அனுமதிச்சீட்டுகளை (Admission Certificate) பதிவிறக்கம் செய்ய இயலும் என்பதால், ஒப்புகைச் சீட்டினை தனித்தேர்வர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். இது மிகவும் அவசியம்.

**தேர்வு மையம் :**

தனித்தேர்வர்கள் அவர்கள் விண்ணப்பிக்கும் கல்வி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தில் தேர்வெழுத வேண்டும்.

**முக்கிய அறிவுரைகள் :**

**I. நேரடித் தனித் தேர்வர்கள் (HP வகை)**

முதன் முதலாக மேல்நிலைத் தேர்வெழுதும் **"HP"** வகை நேரடித் தனித்தேர்வர்கள், பகுதி I மற்றும் II மொழிப்பாடங்களுடன் பின்வரும் ஐந்து பாடத் தொகுப்புகளில் ஏதேனுமொன்றில் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர். ஒரு முறை தேர்வு செய்யப்பட்ட பாடத் தொகுதியினை, எக்காரணத்திற்காகவும் பின்னர் மாற்ற இயலாது.

| பாடத்தொகுப்பு எண் | பகுதி 3 பாடங்கள் | | | |
|---|---|---|---|---|
| 304 | வரலாறு | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 305 | பொருளியல் | அரசியல் அறிவியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 306 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | இந்தியக் கலாச்சாரம் |
| 307 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | சிறப்பு மொழி (தமிழ்) |
| 308 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | வணிகக் கணிதம் |

**<u>தனித்தேர்வர்கள் (H வகை)</u>**

(அ) பழையபாடத் தொகுப்பில் பகுதி–IIIன்கீழ் உள்ள பாடங்கள் புதிய பாடத்தொகுப்பில் உள்ள நிலையில், தேர்ச்சி பெறாத பாடங்களை புதிய பாடத்தொகுப்பின் எண்ணைக் குறிப்பிட்டுத் தனித்தேர்வர்கள் தேர்வெழுத அனுமதியளிக்கப்படுகிறது.

(ஆ) பழைய பாடத் தொகுப்பில் பகுதி – IIIல் உள்ள பாடங்கள் புதிய பாடத் தொகுப்பில் இல்லாத நிலையில், தேர்ச்சி பெறாத பாடம் இடம்பெறும் புதிய பாடத்தொகுப்பின் எண்ணைக் குறிப்பிட்டு தேர்வெழுத தனித்தேர்வர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(இ) தொழிற்கல்வி பாடத்திட்டத்தில் (Vocational Stream) பழைய பாடத் தொகுப்பில் பகுதி –IIIன்கீழ் தொடர்பு பாடங்களில் (பொதுக்கல்வி பாடங்கள்) தேர்ச்சி பெறாதவர்கள், அப்பாடங்கள் இடம்பெறும் புதிய பொதுக்கல்வி பாடத்தொகுப்பு எண்ணைக் குறிப்பிட்டு தேர்வெழுத அனுமதியளிக்கப்படுகிறது.

**II. <u>தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை :</u>**

தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை பணமாக செலுத்த வேண்டும். பார்வையற்றோருக்கு மேற்குறிப்பிட்ட கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

**III. <u>செய்முறை கலந்த பாடங்களில் தேர்ச்சி பெற தனித்தனியே குறைந்தபட்ச மதிப்பெண் நிர்ணயம் குறித்த விளக்கம்</u>**

செய்முறை கலந்த பாடங்களில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாமல், மீண்டும் தேர்வெழுதுவோரைப் பொறுத்தவரை, தேர்ச்சி பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் 150–க்கு 30 மதிப்பெண்களும், செய்முறைத் தேர்வில் 50–க்கு 40 மதிப்பெண்களும் பெற வேண்டும்.

தேர்ச்சி விதிகளின்படி, செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மீண்டும் செய்முறைத் தேர்வு செய்யவேண்டியதில்லை. ஆனால் செய்முறைத் தேர்வில் 40 மதிப்பெண்களுக்கும் குறைவாகப் பெற்று தேர்ச்சி பெறாதவர்கள் அப்பாடத்தில் தேர்ச்சி பெறும் பொருட்டு கண்டிப்பாக செய்முறை மற்றும் எழுத்துத் தேர்வு ஆகிய இரண்டிற்கும் வருகை புரிய வேண்டும்.

மேலும், மார்ச் 2001 மேல்நிலைத் தேர்விற்கு முன்னதாக தேர்வெழுதியவர்கள் தாங்கள் செய்முறைத் தேர்வில் பெற்ற மதிப்பெண் விவரம் குறித்த சான்றினை தாங்கள் படித்த மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். இச்சான்றினை படித்த பள்ளியில் பெறமுடியாமற்போனால், கண்டிப்பாக செய்முறை தேர்விற்கு வருகைபுரிய வேண்டும்.

## IV. கேட்டல்–பேசுதல் திறன் தேர்வு

பகுதி I மற்றும் பகுதி II மொழிப்பாடங்களில் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு கீழ்க்குறிப்பிட்டுள்ள வகைத் தேர்வர்களுக்கு நடத்தப்படும்.

1. அனைத்து நேரடித் தனித்தேர்வர்கள் (HP Category)

2. மேல்நிலைத் தேர்வினை பழைய பாடத்திட்டத்தில் (மார்ச் 1997 மேல்நிலைத் தேர்வுக்கு முன்னர்) எழுதி மொழிப் பாடங்களில் தேர்ச்சி பெறாமல், தற்போதைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள்.

3. இத்தேர்வர்களுக்கு மொழிப்பாடங்களின் (Part I & Part II) இரண்டாம் தாளில் 20 மதிப்பெண்களுக்கு கேட்டல்–பேசுதல் திறன் தேர்வு நடத்தப்படும். கேட்டல்–பேசுதல் திறன் தேர்வு குறித்த விவரங்களை, தனித்தேர்வர்கள், எழுத்துத் தேர்வு மையத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

4. <u>சிறப்பு மொழி (தமிழ்) – கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு</u>
   சிறப்பு மொழி (தமிழ்) பாடத்திற்கும் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு நடத்தப்படும். கருத்தியல் தேர்வு 180 மதிப்பெண்கள் மற்றும் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு–20 மதிப்பெண்கள்.

   எனவே, (அ) சிறப்பு மொழி (தமிழ்) பாடத்தில் செப்டம்பர் 2006 தேர்வு பருவம் வரை தேர்ச்சி பெறாது தற்போது தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் மற்றும் (ஆ) பாடத்தொகுப்பு எண்.307–ன்கீழ் சிறப்பு மொழி (தமிழ்) எழுதும் நேரடித் தனித் தேர்வர்களும் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு செய்ய வேண்டும்.

5. இவ்வாறு தேர்வு மையங்களில் நடத்தப்படும் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடுத்து வரும் மொழிப்பாட தேர்வுகளுக்கும் எடுத்துக் கொள்ளப்படும். எந்தச் சூழ்நிலையிலும் இத்தேர்வை மீண்டும் செய்வதற்கு வழிவகை இல்லை.

6. தேர்வர்கள் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வுக்கு தேர்வு மையத் தலைமைக் கண்காணிப்பாளரால் தெரிவிக்கப்படும் குறிப்பிட்ட தேதியில் வருகை புரிய வேண்டும். தவறினால் கேட்டல் / பேசுதல் தேர்வுக்கான 20 மதிப்பெண்களை இழக்க நேரிடும். கருத்தியல் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்கள் மட்டுமே பதியப்பட்டு மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும்.

## V. மாற்றுத் திறனாளிகளுக்குச் சலுகைகள்

மாற்றுத் திறனாளிகள், டிஸ்லெக்சியா, நரம்பியல் கோளாறு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், கூடுதல் ஒரு மணி நேரம் ஆகிய குறிப்பிட்ட சலுகைகளை பெற விரும்பினால் உரிய மருத்துவச் சான்றிதழ்களைக் கட்டாயமாக இணைத்து தனியே ஒரு சலுகை கோரும் கடிதத்தை தமது விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க் வேண்டும்.

## VI. வெளி மாநிலத் தேர்வர்கள்

வெளி மாநிலத்தில் படிப்பை முடித்து மேல்நிலைத் தேர்வுக்கு நேரடித் தனித்தேர்வராக விண்ணப்பிக்கும் தேர்வர்கள் பத்தாம் வகுப்பு தேர்ச்சிபெற்றதற்கான மதிப்பெண் சான்றிதழ்களுடன் தாங்கள் பயின்ற மாநிலத்திலிருந்து பெற்ற அசல் இடப்பெயர்வு சான்றிதழையும் (Migration Certificate) இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். வெளி மாநிலத் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட மேல்நிலைத் தேர்வு எழுதியவர்கள் நேரடித் தனித்தேர்வராக விண்ணப்பிக்க இயலாது.

## VII. தனித்தேர்வர்கள் அரசுத் தேர்வுகள் சேவை மையத்தில் (Govt.Examination Service Centre) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

| வ. எண் | H வகையினர் | HP வகையினர் |
|---|---|---|
| 1 | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை அரசுத் தேர்வுகள் சேவை மையத்தில் (Govt.Examination Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும் | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை அரசுத் தேர்வுகள் சேவை மையத்தில் (Govt.Examination Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும் |
| 2 | மதிப்பெண் சான்றிதழ் ஒளிநகல் (இதுவரை எழுதிய மேல்நிலைத் தேர்வுகளுக்கானது) | பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் மதிப்பெண் சான்றிதழ். (அல்லது) **பத்தாம் வகுப்பிற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் சான்றிதழ் மற்றும் அச்சான்றிதழ் பத்தாம் வகுப்பிற்கு இணையானததுதான் என்பதற்கான இணைச்சான்றிதழ் (Equivalence Certificate) அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெற்று கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.** |
| 3 | பள்ளித் தலைமையாசிரியரிடம் பெற்ற தகுதிச் சான்றிதழ் (பள்ளி மாணவராக பதிவு செய்யப்பட்டு தேர்வெழுதாதவர்களுக்கு மட்டும்) | பள்ளி மாற்றுச் சான்றிதழின் அசல் |
| 4 | செய்முறை மதிப்பெண்களுக்கான ஆவணம் (செய்முறை அடங்கிய பாடங்களைத் தேர்வெழுதுவோர் மட்டும்) | இடப்பெயர்வு சான்றிதழ் அசல் (வெளி மாநிலத் தேர்வர்கள் மட்டும்) |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இணைப்புகளை சமர்ப்பிக்கும் தனித்தேர்வர்களின் விண்ணப்பங்களே ஆன் – லைன் பதிவுக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்வரை தனித்தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

**குறிப்பு:- மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வை எழுதிட அரசாணைப்படி தகுதியுள்ள தனித்தேர்வர்கள் விண்ணப்பித்திட இரண்டு பகுதிகளாக (With out Fine) 11.12.2017 முதல் 16.12.2017 வரையும், (With Fine) 18.12.2017 முதல் 20.12.2017 வரையும் காலஅவகாசம் வழங்கப்படுவதன் அடிப்படையில், தட்கல் முறையில் விண்ணப்பித்திட மீளவும் தனியே வாய்ப்பளிக்கப்படமாட்டாது.**

ஒம்/-
**இயக்குநர்**

**இடம்: சென்னை – 6**
**நாள்: 08 .12.2017**